நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.372/2025

## P.W.4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சாகுல்அமீது |
| தந்தை / கணவர் பெயர் | : | அப்துல்மஜீத் |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW4** |
| வயது | : | 54 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 13–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.50 AM

1. நான் தற்போது மேட்டுர் இந்திரா நகரில் குடியிருந்து சதுரங்காடியில் பிளாஸ்டிக் பொருட்கள் விற்கும் கடை வைத்திருந்தேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒருநாள் நான் கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்ப வந்தபோது மாலை 7.00 மணி

சுமாருக்கு அங்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். மறுநாள் அந்த விபத்து சம்மந்தமாக போலீசார் வந்து விபத்து நடந்ததற்கு சாட்சியாக இருக்க சொல்லி கையெழுத்து கேட்டதால் நானும், தர்மலிங்கம் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். மற்றப்படி நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 1 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். ( **பார்வை மகசரிலுள்ள 1 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்ததாக நியாபகம் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலீசார் கேட்டுக்கொண்டதற்காக நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். மற்றப்படி எனக்கு வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.00 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.372/2025

## P.W.5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | தர்மலிங்கம் |
| தந்தை / கணவர் பெயர் | : | அர்த்தனாரி |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW5 |
| வயது | : | 65 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 13–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.50 AM

1. நான் தற்போது பொன்னகரில் குடியிருந்து சதுரங்காடியில் துணி வியாபாரம் செய்து வருகிறேன். நான் விபத்து நடந்த இடத்திற்கு தூரத்தில் டீக்கடையில் டீசாப்பிட்டு கொண்டிருந்தேன். நான் துணிக்கடை வைத்திருக்கும் ATC டிப்போ

அருகில் விபத்து ஏற்பட்டதாக எல்லோரும் சத்தம்போட்டுக்கொண்டு ஓடினார்கள். நான் அருகில் சென்று பார்ப்பதற்குள் அடிப்பட்ட நபரை எடுத்துசென்றுவிட்டதாக சொன்னார்கள்.

2. சம்பவத்திற்கு 5–6 நாட்கள் கழித்து போலீசார் வந்து எனது பெயரை எழுதிவாங்கிக்கொண்டு சென்றார்கள். வழக்கு சம்பவத்தை பற்றி தெரியுமா என்று கேட்டார்கள். நான் தெரியாது என்று சொன்னேன். போலீசார் வந்து விபத்து நடந்ததற்கு சாட்சியாக இருக்க சொல்லி கையெழுத்து கேட்டதால் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். வேறுயார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. . மற்றப்படி நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது.

3. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். ( **பார்வை மகசரிலுள்ள 2 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலீசார் கேட்டுக்கொண்டதற்காக நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். மற்றப்படி எனக்கு வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.05 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**